7. அறிக்கைகள் அளித்தல்.

(அ) மதிப்பீட்டுக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை அளித்தல் திரு. கி. தருமலிங்கம்.

திரு. கி. தருமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பீட்டுக் குழுவின் சார்பாக 1992-93 ஆம் ஆண்டு கைத்தறி மற்றும் துணி நூல் குறித்த மேற்படி குழுவின் 8-வது அறிக்கையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொதுக் கணக்குக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. பெ. பொன்னுசாமி, பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

திரு. பெ. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992—93 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவின் பின்வரும் அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கிறேன்:—

1. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1981-82 ஆம் ஆண்டுகளுக்கான (சிவில்) அறிக்கைகளின்மீது பொதுக் கணக்குக் குழு அளித்த நாற்பத்தேழாவது அறிக்கை (எட்டாவது பேரவை) யில் பொதுப் பணித்துறை குறித்த பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய குழுவின் தொண்ணூறாவது அறிக்கை.

2. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1977-78 ஆம் ஆண்டுக்கான (சிவில் அறிக்கையின் மீது பொதுக் கணக்குக் குழு அளித்த இருபத்தி மூன்றாவது அறிக்கை (ஏழாவது பேரவை) மற்றும் முப்பத்தேழாவது அறிக்கை (ஒன்பதாவது பேரவை)யில் மக்கள் நல்வாழ்வு, இந்திய மருத்துவம், ஓமியோபதி மற்றும் குடும்ப நலத்துறை குறித்து மேலும் தொடரப்பட்டுள்ள பரிந்துரையின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றி குழுவின் தொண்ணூற்று ஒன்றாவது அறிக்கை.

3. 1986-87 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் (வருவாய் வரவினங்கள்) வணிகவரி மற்றும் அறநிலையத்துறை (முத்திரைத்தாள் மற்றும் பத்திரப் பதிவுக் கட்டணம் மட்டும்) குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் தொண்ணூற்று இரண்டாவது அறிக்கை.

4. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83 மற்றும் 1983-84 ஆம் ஆண்டுகளுக்கான சிவில் அறிக்கைகளின் மீது பொதுக் கணக்குக் குழு அளித்த பதினேழாவது அறிக்கை (ஒன்பதாவது பேரவை) யில் வேளாண்மை துறை குறித்த பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய தொண்ணூற்று மூன்றாவது அறிக்கை.

5. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1981-82 ஆம் ஆண்டிற்கான (சிவில்) அறிக்கையின் மீது பொதுக் கணக்குக் குழு அளித்த நாற்பத்தேழாவது அறிக்கை (எட்டாவது பேரவை)யில் போக்குவரத்துத்துறை குறித்த பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய தொண்ணூற்று நான்காவது அறிக்கை.

நண்பகல் 12.00

8. அறிவிப்புகள்.

(அ) 1993-94'-ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளை மொழிவது குறித்து ஆளுநரின் செய்தி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1993-94 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Clause 2 of Article 206 read with Clause 3 of Article 203 of the Constitution of India, I, Bhishma Narain Singh, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly to make grants in advance to the Demands for the year 1993-94.

9. 1993-94 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1993-94 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு- மாண்புமிகு நிதியமைச்சர்.